DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

C.C.No. -129/2025

Prosecution PW -1

| | | |
|---|---|---|
| Name | திரு.தவமணி | Occupation |
| Husband/Father Name | | Village |
| Taluk | | Age |
| Date | 18.02.2026 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused present.

<u>முதல் விசாரணை</u>

நான் தமிழ்நாடு காவல்துறையில் ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று கள்ளக்குறிச்சி மாவட்டம் ஒள்ளியாம்பாளையம் கிராமத்தில் வசித்து வருகிறேன். கடந்த 27.07.2010ம் தேதி நான் பண்ருட்டி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது, இரகசியத் தகவலாளி போன் மூலம் பண்ருட்டி இரயில்வே ரோட்டில் பீடர் ரோட்டில் விஜயா என்பவர் கஞ்சா எனும் போதைப்பொருளை விற்பனைக்காக தனது வீட்டின் பின்புறம் மறைத்து வைத்திருப்பதாகவும், நேரில் வந்தால் சம்பவ இடத்தையும், எதிரியையும் அடையாளம் காட்டுவேன் என்று கூறிய தகவலை பதிவு செய்தேன். பின்னர் நிலையத்திலிருந்த தலைமைக்காவலர்கள் அண்ணாமலை, சின்னசாமி ஆகியோருடன் சம்பவஇடம் சென்று கண்காணித்தபோது, தகவலாளி அங்கு வந்து எதிரியின் வீட்டை அடையாளம் காட்டி விட்டு சென்றுவிட்டார். எதிரி வீட்டிற்குள் இருந்தவரை விசாரிக்க அவர் தன் பெயர் விஜயா என்று பெயர் விலாசத்துடன் கூறினார். நான் அவரிடம் நீங்கள் கஞ்சா வைத்திருப்பதாக தகவல் வந்துள்ளது, உங்களை சோதனை செய்யவேண்டும், அவ்வாறு சோதனை செய்ய நீதிதுறை நடுவர் முன்போ, அல்லது அரசிதழ் பதிவுபெற்ற அலுவலர் முன்போ சோதனை செய்து கொள்ளஉரிமை உள்ளது என்று கூறியபோது, அதற்கு அவ்வாறு தேவையில்லை உதவி ஆய்வாளராக நீங்களே சோதனை செய்யலாம் என்று கூறினார். அதனை எழுத்துமூலமாக பதிவு செய்து எதிரியிடம் கையொப்பம் பெற்று சார்வு செய்தேன். அதில் சாட்சிகளாக அண்ணாமலை, சின்னசாமியிடம் கையொப்பம் பெற்றேன், அந்த சோதனை சம்மத

கடிதம் அதசாஆ**.1**. பின்னர் எதிரி எடுத்து ஆஜர் செய்த பாலீதின் தூக்குப்பையை சோதனை செய்த போது அதில் 3.00 கிலோ கஞ்சா இருந்தது. அதிலிருந்து மாதிரிக்காகவும், பகுப்பாய்விற்காகவும் தலா இரண்டு 50 கிராம் வீதம் எடுத்து காக்கி கவரில் மடித்து நூலால் கட்டி SHO சீல் வைத்து அதில் எதிரி மற்றும் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று நானும் கையொப்பம் செய்தேன். மாதிரி கஞ்சாக்கள் சா**.**பொ**.1,2**. மீதமுள்ள 2.900 கிலோ கஞ்சாவை அதே பாலிதின் கவரில் வைத்து காக்கி பேப்பரால் மடித்து நூலால் கட்டி SHO சீல் வைத்து அதில் எதிரி மற்றும் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று நானும் கையொப்பம் செய்தேன். மீதமுள்ள கஞ்சா சா**.**பொ**.3**. பின்னர் மாதிரி கஞ்சாவையும், மீதமுள்ள கஞ்சாவையும் 10.15 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் மகசரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர் அதசாஆ**.2**. பின்னர் எதிரி ம்ற்றும் தடயச்சொத்துடன் 13.00 மணிக்கு நிலையம் வந்து நிலையக் குற்ற எண். 795/2010 பிரிவு 20(b)(i) of NDPS Act க் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்தமுதல் தகவல் அறிக்கை அதசாஆ.3. பின்னர் சாட்சிகள் அண்ணாமலை, சின்னசாமி ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்கு ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன்.

<u>குறுக்கு விசாரணை எதிரி தரப்பில்</u>

எனக்கு வந்த இரகசியத் தகவலை பொதுநாட்குறிப்பில் பதிவு செய்து மேல் அதிகாரிக்கு எழுத்துமூலமாக தெரிவிக்க முன் அனுமதி கடிதம் அனுப்பவில்லை என்றால் சரிதான். எதிரி பெண் என்பதால் பெண் காவலர் உதவியுடன் சம்பவ இடம் சென்று சோதனை மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். பிரிவு 57NDPS Act ன் கீழ் என்னுடைய சோதனை கைது மற்றும் கைப்பற்றுதல் நடவடிக்கை குறித்து மேல் அதிகாரிக்கு தனி அறிக்கை சமர்பிக்கவில்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசரில் எதிரியின் கையொப்பம் பெறவில்லை என்றால் சரிதான். மாதிரி தடயம் நீதித்துறை நடுவர் முன்பு எடுக்கவில்லை என்றால் சரிதான். 27.07.2010 அன்று கைப்பற்றப்பட்ட தடயப்பொருள் 17.08.2016 தான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இடைப்பட்ட காலத்தில் தடயப்பொருள் எங்கு யார் வசம் இருந்தது என்பதனை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சொன்ன நேரம் நாள் எந்த தகவலும் வரவில்லை என்றாலும், எதிரியை கைது செய்யவில்லை என்றாலும், எதிரி எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும், எந்த தடய பொருளும் கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. அனைத்து

ஆவணங்களும் தடய பொருட்களும் காவல் நிலையத்தில் பின்னிட்டு தயார் செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்தரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும் சாட்சிக்குப் படித்து
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்
கொள்ளப்பட்டது.

ஒம்/-...ஜி.சுந்தரராஜன்,
கூடுதல் மாவட்ட (ம) அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்